தலைமைச் செயலகத்தில் நேற்று (28.06.2024) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் இயங்கும், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையில் பணியாற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், வாழ்த்துகளையும் வழங்கி, பயிற்சியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இணைச் செயலாளர் திருமதி ஆர். சீதாலட்சுமி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் அமர் குஷ்வாஹா, மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (28.06.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக்கோரிக்கை (2024-25)ஐ முன்னிட்டு, சென்னை. மெரினா கடற்கரையில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

சி.பி.ஐ. விசாரணை என்ற போது ஜெயலலிதா கூறியது என்ன?

சி.பி.ஐ. விசாரணை என்று கூறி அரசியல் செய்யாதீர்கள்!

சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு விளக்கமான பதில்!

சென்னை, ஜூன் 29

சட்டப்பேரவையில் நேற்று காவல்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மனிதநேய மக்கள் கட்சி ஜவாஹிருல்லா பேசும்போது கள்ளக்குறிச்சி விஷயத்தில் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. சி.பி.ஐ. விசாரிக்கும், மகளிர் ஆணையம் என்று நம்முடைய மாநிலங்களினுடைய உரிமைகளில் குறுக்கிடுகிறார்கள் என்று பேசியபோது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறுக்கிட்டு பேசியதாவது:-

நம்முடைய உறுப்பினர் அவர்கள், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் CBI enquiry கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். CBI enquiry மட்டுமல்ல வெளியில் போய் பேட்டி கொடுக்கிறபோது கூட, ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு எங்களுக்கு வாய்ப்பே இல்லை என்று தொலைபேசியிலும் பேசுகிறார்கள். நேற்று உண்ணாவிரதத்திலும் அதைத்தான் பேசியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒருமுறைக்கு இரண்டு முறை வெளியே நீங்கள் நடவடிக்கை எடுத்தாலும், உள்ளே நீங்கள் வந்து ஜனநாயகக் கடமை ஆற்றுங்கள் என்றுதான் தொடர்ந்து அவர்கள் வலியுறுத்தி உள்ளே வரச்சொன்னார்கள். ஜனநாயகக் கடமை ஆற்ற முடியாமல்தான் வெளியே போய் உண்ணாவிரதம் என்ற பெயரில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கே நினைவூட்ட விரும்புகின்றேன். நான் எதிர்க்கட்சியாக இருக்கிற போது காவல் துறை மானியத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை பேசுவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். 2015 செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி இதே மாமன்றத்தில் நான் பேசினேன். என்ன பேசினேன் என்று சொன்னால், திருச்செங்கோட்டிலே விஷ்ணுப்பிரியா என்கிற ஒரு DSP அவர்கள் இறந்திருக்கிறார்கள். அது தற்கொலையா? அல்லது கொலையா? என்கிற ஒரு சந்தேகம் இருக்கிறது. எனவே, அன்றைக்கு ஓய்வு பெற்றிருக்கிற DGP ஆக இருந்த திலகவதி அவர்கள் ஒரு பேட்டி கொடுத்திருந்தார்கள். இது காவல் துறை சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. அதனால், இதை CBI enquiryக்கு விடலாம் என்று அந்த அம்மையார் சொல்லியிருந்தார்கள்.

அதை நான் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, அந்தப் பத்திரிக்கை செய்தியை எடுத்து, ஓய்வு பெற்ற DGPயே சொல்கிறார். இது காவல் துறை சம்பந்தப்பட்டது; ஒரு பெண் சம்பந்தப்பட்டது. அதனால் CBI enquiry விட வேண்டுமென்று சொல்கிறார் என்ற கருத்தை சொன்னவுடனேயே, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் எனக்கு என்ன பதில் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், CBI விசாரணை மட்டும் நேர்மையான விசாரணை என்று கருதுவதற்கு சரியானது அல்ல. அகில இந்திய அளவிலே பரபரப்பாக உள்ள பல முக்கிய வழக்குகளில் CBI முன்னாள் இயக்குநர் மீதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்ற விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் நினைவூட்டுகிறேன் என்று என்னுடைய அந்தக் கேள்விக்கு அப்போதைய முதலமைச்சராக இருந்த ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதில் சொன்னார்கள்.

அதோடு மாத்திரமல்ல, 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி CBI enquiry வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த பரிதி இளம்வழுதி அவர்கள் அப்போது கேட்டார்கள். அன்றைக்கு அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அதற்கு அவர் பதில் என்ன சொன்னார் என்றால்; ஏதோ CBI என்றால் அவர்கள் ஏதோ நேர்மையாக தேவலோகத்திலிருந்து இறங்கி வந்தவர்கள் போலவும் அவர்கள் தவறே செய்யாதவர்கள் போலவும், இங்கே உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு காவல் துறையினர்மீது எங்களுக்கு நம்பிக்கையுண்டு என்று அவர்களே இந்த மன்றத்தில் பேசியிருக்கிறார்.

ஆனால், அவரை தெய்வம் என்றும், அவரை முதலமைச்சர் என்றும், அவரால்தான் நான் முகவரி செய்யப்பட்டேன் என்று பேசிக்கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் இப்போது CBI enquiry வேண்டுமென்று ஜனநாயகக் கடமையாற்றாமல் வெளியே போய்க்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு காவல் துறைமீது தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு நிரம்ப நம்பிக்கையிருக்கின்ற காரணத்தினால்தான், CBCID enquiry போட்டிருக்கிறார்கள். உண்மை வெளிப்படும். யாராக இருந்தாலும், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள். இதை வைத்துக்கொண்டு அரசியல் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். அது தமிழ்நாட்டு பொதுமக்கள் மத்தியில் எடுபடாது.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து

சிறுபான்மையினர் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம்!

பீட்டர் அல்போன்ஸ் தலைமை! அமைச்சர்கள் க.பொன்முடி - செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சிறப்புரை!

விழுப்புரம், ஜூன் 29-

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் 'இந்தியா' கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சிறுபான்மையினர் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

ஜூலை 2 - செவ்வாய்க் கிழமை அன்று காலை 9.00 மணி அளவில் முண்டியம்பாக்கம் - அடையாறு ஆனந்த பவன் - ஜீவன் பார்க்கில் நடைபெறும் இம்மாபெரும் ஆலோசனைக் கூட்டத்திற்கு - தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் தலைமை வகிக்கிறார்.

விஜிலா சத்யானந்த் முன்னிலை வகிக்கிறார்.

கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் வரவேற்புரையாற்றுகிறார்.

அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி, முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. மற்றும் தி.அ.முகமது சகி, இரா. ஜனகராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

எம்.டி.குலாம்மொய்தீன், ரெவ. ராபர்ட் வில்லியம் பால்ராஜ், ஹாஜி எம். அப்துல் சலாம், ஆர். பி.ரமேஷ், குமார், ரங்கா பூபதி, ஜெயச்சந்திரன், நைனா முகமது, மா.இமானுவேல், மௌலானா மௌலவி, அல்ஹஜ் ஏ.சிராஜூத்தீன் அன்வாரி, அல்ஹாஜ் வி.ஆர்.முஹம்மது இப்ராஹிம், அல்ஹாஜ் எஸ்.எம். அமீர் அப்பாஸ், அல்ஹாஜ் முஸ்தபா உள்ளிட்டோரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

தமிழ்நாடு கிறிஸ்துவ சபைகளின் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.லியோ நெல்சன் நன்றி கூறுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! சைதை கிழக்குப் பகுதி

169வது வட்டத்தில் மாபெரும் கால்பந்து போட்டி! அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசு வழங்குகிறார்!

தமிழச்சி தங்கபாண்டியன் - மு.மகேஷ்குமார் பங்கேற்பு! இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை! தலைமை: அ.தமிழரசன்!

சென்னை, ஜூன் 29-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 169வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் கால்பந்துப் போட்டி இன்று (29.06.2024 - சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் தாடண்டர் நகரில் நடைபெறுகிறது.

தலைமை: சைதை கிழக்கு பகுதி அ.தமிழரசன், முன்னிலை: இரா.துரைராஜ் எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., மு.ஆரோக்கியம், எல்.ஆரோக்கியராஜ்,

வரவேற்புரை: இரா.சுதாபிரியன், அ.ஆரி இரா.தமிழ்வாணன், துரை சரவணன், சைதை ஆ.விக்டர், மு.சந்திரா மை.அருள்ராஜ், வி.என்.செல்வமணி, சூரியன் கே.பிரபு, அ.ஆனந்தராஜ், ஆ.பரணி

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இறுதி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குகிறார்.

இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை எஸ்.குணசேகரன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., தா.மோகன் குமார் எம்.சி.,

சைதை கிழக்கு மேற்கு பகுதி நிர்வாகிகள்: இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.பாக்கியலட்சுமி, களக்காடி எல்லப்பன், த.சம்பத் ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதமன்,

சைதை கிழக்கு மேற்கு வட்ட செயலாளர்கள்: சைதை மு.இராஜா, க.மணி, கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா அட்கோகமலநாதன்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: ஆர்.டி.மூர்த்தி, சைதை, சாதிக், ஜெ.அகஸ்டின், நா.மணி கண்டன், அஞ்சல், ராமன், கோ.பாஸ்கர், க.ஒப்பில்லா மணி,

சைதை கிழக்கு மேற்கு, மாவட்ட, பிரதிநிதிகள்: டி.வி.நரசிம்மன், என்.நந்த கோபால், ஏ.மஜீத், எஸ். ஜெ.சலாம், எஸ்.ராதாகிருஷ்ணன், வே.முருகன், க.உமாபதி, ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், ஜி.யோவான், கோட்டூர் ந.பாபு, எஸ்.ரவி, எஸ். சேகர், மு.மகேஷ்லாரன்ஸ், கே.எம்.எஸ்.கணேசன்

சைதை கிழக்கு பகுதி மாவட்ட அணிகளின் நிர்வாகிகள்: ஏ.கௌதம், சே. அருண், ஈ.மதனசேகரன், க.வேல்முருகன், பி.செல்வம், ஆர்.ஜி.ஸ்டாலின், ஆர்.செல்வம், கே.எஸ். பாபு, இரா.சுதாகர், எஸ். எம்.மோகன்தாஸ், ஜெ. வி.பிரதாப், மோ.எழில், எஸ்.பிரகாஷ், பார்வதி, புவனேஸ்வரி, ஆர்.சேதுராமன், பு.ஜவஹர்தீன், மு.முருகன், மு.செல்வகுமார், எஸ்.மணி கண்டன், எஸ்.ஜெ.அன்பு ரோஸ், மு.ஜெயவேல், ச. ஜெயராம், சி.தேவேந்திரன், எஸ்.கரிமுல்லா, பி.திவாகர், ஏ.சுப்பிரமணி, எஸ்.ஏ. மோகன்குமார், ஏ.துரைராஜ், பென்னிகிளமெண்ட்

169வது வட்ட நிர்வாகிகள்: வே.கோதண்டம், சைதை ஆ.வரதன், சொ.முருகையன், டி.கண்ணன், எம்.சாந்தி, பா.செல்லபாண்டியன், கேபிள், சம்பத், கே.பி.மகேஷ், எம். பாபு, ஏ.எஸ்.ரியாஸ், அகமது

169வது வட்ட சைதை பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்:

ஜோ.சசிகுமார், எம். அருள், ப.அருண்குமார், இரா.புருஷோத்தமன், சார்லஸ், மூவேந்தன், ஆ.ரிச்சர்ட்சன், கே.செந்தில், ஜோ.பிரான்சிஸ், எல்.செந்தில், தாமஸ், மார்ஷல், ஆட்டோ, தேவன், ஏ. ரஷீத், வெ.சத்யநாராயணன், ஏ.பி.பெருமாள், எஸ்.சண்முகவேல், கே. மேகநாதன், ஜெ.கலா, கவிதா, எஸ்.ஆர்.கணபதி, ஏ.ஜெயசிம்மன், சி.சரத், கோ.உதயசூரியன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இர.பொன்இளவரசன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கலைஞர் பிறந்த நாள் 2000 நபர்களுக்கு உணவு! நலஉதவிகள்!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்கினார் !

சென்னை ஜூன்: 29

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பாக (26.06.2024 புதன் கிழமை) மேயர் பாசுதேவ் தெருவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இர.பொன்இளவரசன் தலைமையில் சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,பகுதி செயலாளர் இரா. லட்சுமணன், 42(அ) வட்டக் கழக செயலாளர் ச.தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில்

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லயோலா கே.மதன், வை. கௌதமன், இ.ரவிக்குமார், கட்பீஸ் ப.சோமசுந்தர மூர்த்தி ஆகியோர் வரவேற்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 2000 நபர்களுக்கு அசைவ உணவு சம பந்தி விருந்து மற்றும் நலஉதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சமபந்தி விருந்து மற்றும் நலஉதவிகளை சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்கினார்.

இதில் மாவட்ட அவை தலைவர் ஆர்.வெற்றி வீரன், மண்டல குழுதலை வர் நேதாஜி யு.கணேசன், நாகம்மை கருப்பையா, பகுதி நிர்வாகிகள் என். அனிபா,கே.பாலு, ஆர். டி.ராஜா, வி.வே தலட்சுமி,மாஸ்டி.வெங்கடேசன், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி , என்.மருதுகணேஷ் , சிவாஜி கிருஷ்ண மூர்த்தி, வெ.சு.சத்யநாராயணன்,எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, ஏ.ரமேஷ்பாபு,

வட்ட கழக செயலாளர்கள் ப.குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், மா.நாகராஜ், நா. கோதண்டன், பொ.து. ராஜா,கி.தேவன், ஆர்.ஏ. எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன்,

ப.ஆ.சண்முகம், எம்.எம். சாமி, பி.கே.மூர்த்தி, மா. ரூபசங்கர்,வி.முத்து, எஸ். சொக்கலிங்கம் , மீஞ்சூர் முகுந்தன், ஜி.ராஜா, மணி மேகலை ஏழுமலை எம்.சி,

கோ.ஹரிராமன், தே.ஜனார்த்தன், ஜெ.வசந்தகுமார், ஆர்.ராஜா, எம். கலைவாணி, ஜெ.மகேஸ்வரி, ஒலி.ஒளி ஆ.பாபு, ஜே.ஜே.நெல்சன், ஏ.வெங்கடேசன், வி.கார்த்திக், இ. கார்த்திக், கே.அருண்குமார், பார்த்தசாரதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பாக முகவர்கள்,இளைஞர் அணி,மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.

எஸ்.ஹரிஷ்குமார், ச.குமரன் ஆகியோர் நன்றி கூறினர்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, மாதவரம் வடக்கு பகுதி திமுகவினர், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் அய்யூர் அகரம் ஊராட்சி பாகம் எண் 177 உட்பட்ட நடுத்தெரு, பழைய காலனி, அங்காளம்மன் தெரு, சென்னை பைபாஸ் சாலை ஆகிய இடங்களில், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் வாக்கு சேகரித்தல் பணிகளில், 23 அ வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன், 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் முன்னிலையில் ஈடுபட்டனர். கிளைச் செயலாளர் சந்திரன், பாக முகவர் அறிவழகன், இளைஞர் அணி நிர்வாகிகள் பன்னீர்செல்வம், ரத்ன சபாபதி , மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், பகுதி பிரதிநிதி வி. ஹரி, சிட்டி சேகர், ராஜேஷ் கண்ணன் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் - 2024

பாகம் எண் 227, 228, 229, 230, 231குட்பட்ட செயற்குழு கூட்டம்!

மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை ஆதரித்து 30.6.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை10:30மணிஅளவில்சென்னைகிழக்குமாவட்டத்திற்குட்பட்ட விக்கிரவாண்டி பேரூர் பாகம் எண்கள் 227, 228, 229 ,230,231 -ல் செயற்குழு கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் பொன். கௌதமசிகாமணி முன்னிலையில் நாகம்மை காட்டன் மில் அருகில் உள்ள ஜெயராமன் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளதால் பேரூர் கழகத் தோழர்கள், சென்னை கிழக்கு மாவட்ட தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :தேர்தல் பணிகள்

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

தாம்பரம் கிழக்கு – மேற்கு மாநகர கழகத்தினர் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட, ஈச்சங்குப்பம் ஊராட்சியில், பாகம் எண் 145ல்* தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, 4வது மண்டல குழு தலைவர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர்,டி காமராஜ் தலைமையில், ஈச்சங்குப்பம் கிளை கழக செயலாளர்கள், தலைவர் கே.அரிகிருஷ்ணன், பி.ஏழுமலை, விழுப்புரம் நகர துணை செயலாளர் வி. சோமு ஆகியோர் வீடு வீடாக சென்று தீவிர வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டனர். உடன் கி.வேல்மணி எக்ஸ். எம்.சி, சி.சுரேஷ் எம்.சி, வட்ட செயலாளர் மு.வினோத் , மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ச.இராஜேஷ்குமார், இரா.விஜயகுமார், எஸ்.கார்த்திக், மு.சூர்யா, எ.நவீன்குமார், இரா.பாஸ்கர், சே.ரமேஷ், ஜெ.கே.ராஜா, ர.ஹரிஹரன், வே.குருமணி, தே.மனோஜ் மற்றும் கிளை கழக தோழர்கள் பங்கேற்றனர்.